# SRI DURGADEVI DEVASTHANAM INC

Inc. in NSW Registration Number: INC 9878192 ABN: 55768913767
21 – 23 Rose Crescent Regents Park 2143 Tel No. 9644 6682 9746 9724
www.sydneydurga.com

# சைவ சமய அறிவுப் போட்டி

## மேற்பிரிவு

## (12 வயது முதல் 15 வயது வரை)

## **மாதிரிக்கேள்விகள்**

| | | |
|---|---|---|
| 1 | சைவசமயம் என்பதின் பொருளைக் கூறுக. | சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடும் சைவர்களின் மதம் சைவசமயம் எனப்படும். |
| 2 | ஆதிகாலத்தில் சைவர்கள் சிவபெருமானை எந்த வடிவத்தில் வழிபட்டார்கள்? | சிவலிங்க வடிவத்தில் வழிபட்டார்கள். |
| 3 | சைவசமய அறிவுப் போட்டியை நடத்துவதால் உங்களுக்கு ஏற்படும் 3 நன்மைகள் கூறுக. | சமயஅறிவு, கடவுள் நம்பிக்கை, பாரம்பரிய வழிபாட்டு முறைகள் பற்றிய விளக்கம், சமயத்தை வளர்த்த பெரியோர்கள் பற்றிய விளக்கம் |
| 4 | மும்மலங்கள் என்றால் என்ன? | மும்மலங்கள் ஆணவம், கன்மம், மாயை எனப்படும். |
| 5 | கிரியை என்றால் என்ன பொருள்? | இறைவனை வழிபடும் செயல் முறைகளே கிரியை (பூசை) எனப்படும். |
| 6 | சைவ சமயத்தவர் பல்வேறு மூர்த்திகளுக்குக் கோயில் அமைத்து வழிபடுகிறார்கள். இப்படி வழிபடும் மூர்த்திகள் பல இருந்தாலும் சைவர்களிடம் ஆழமாக வேரூன்றி இருக்கும் தனித்துவம் மிக்க நெறி – கொள்கை என்ன? | வழிபடும் மூர்த்திகள் பல இருந்த போதிலும் இவை அனைத்தும் சிவபரம் பொருளான ஒன்றே – அதாவது இறைவன் ஒருவனே என்ற சிவநெறிக் கொள்கை சைவர்களிடம் ஆழமாக வேரூன்றியிருக்கும் தனித்துவம் மிக்க கொள்கை ஆகும். |
| 7 | சிவராத்திரி எதைக் குறிக்கிறது? | சிவபெருமான் இலங்கோற்பவராகத் சோதி வடிவைச் சுருக்கிப் பின்பு சிவலிங்க வடிவமாகத் தோன்றிய தினத்தைச சிவராத்திரி குறிக்கும். |
| 8 | சைவ சமயத்தில் சிவபெருமானை எப்படி வணங்குவார்கள்? | உருவ வழிபாடு, அருவவழிபாடு, அருவுருவ வழிபாடு |
| 9 | திருக்கோணேச்சரம் கோயில் எங்கு உள்ளது? | இலங்கையில் உள்ள திருகோணமலையில் காணப்படும் திருகோணமாமலையின் உச்சியிலே உள்ளது. |
| 10 | சைவர்களின் சமய நூல்கள் எவை? | சைவசித்தாந்த நூல்கள், திருமுறை நூலகள். |
| 11 | உலகில் எத்தனை கடவுள் உள்ளனர்? | கடவுள் ஒருவரே. |
| 12 | உயிர்களுக்கு அழிவு உண்டா இல்லையா என்பதைப் பற்றிச் சைவ சித்தாந்தம் என்ன கூறுகிறது. | உயிர்களுக்கு அழிவு இல்லை என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. |
| 13 | "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" - இதைக் கூறியவர் யார்? எங்கே கூறியுள்ளார்? | இதைக் கூறியவர் ஔவையார். கொன்றைவேந்தன் நூலில் கூறியுள்ளார். |
| 14 | கோயில் இல்லாத ஊரில் ........... என்று தொடங்கும் ஒரு பழமொழி உண்டு. அதைச் சொல்லவும் | கோயில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம் என்பது அந்தப் பழமொழி. |
| 15 | கோபுரத்திற்கு வேறு பெயர் தெரியுமா? | கோபுரத்தைத் தூலலிங்கம் என்றும் கூறுவர். |

| | | |
|---|---|---|
| 16 | கோயில்களின் கோபுரங்கள் ஏன் உயரமாக அமைக்கப்பெற்றுள்ளன? | உயரமான கோபுரங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவை இறைவனின் முழுமுதற்றன்மையை உணரவைத்து அவன்மேல் பத்தி செலுத்த வேண்டுமென்ற எண்ணத்தை எங்கள் மனதிலே உருவாக்குகின்றது. |
| 17 | ஆலயம் தொழுவது .......... என்று தொடங்கும் ஒரு பழமொழி உண்டு. அதைச் சொல்லவும். | ஆலயம் தொழுவது சாலமும் நன்று என்பது அந்தப் பழமொழி |
| 18 | கொடிமரம் எதனைக் குறிக்கும்? | கொடிமரம் சிவத்தைக் குறிக்கும். |
| 19 | கொடிமரத்திலே காணப்படும கொடிச் சீலையும் தருப்பைப் கயிறும் எவற்றைக் குறிப்பிடுகின்றன? | கொடிமரத்திலே காணப்படும் கொடிச் சீலை ஆன்மாவையும் தருப்பைக் கயிறு பாசத்தையும் குறிப்பிடுகின்றன. |
| 20 | திருமாலின் ஐம்படை எவை? | வில், வாள், தடி, சங்கு, சக்கரம் |
| 21 | பிரணவ மந்திரத்தின் பொருள் கூறமுடியாது தடுமாறிய பிரமனை முருகப் பெருமான் என்ன செய்தார்? | துலை கலங்கும்படி குட்டினார். பின்பு பிரமனைச் சிறையில் அடைத்தார். |
| 22 | முருகக் கடவுள் எவ்வாறு தோன்றினார்? | சிவபெருமானின் நெற்றிக் கண்களில் இருந்து புறப்பட்ட 6 தீப்பொறிகளும் சரவணப்பொய்கையை அடைந்ததும் ஆறு திருக்குமாரர்களாக உருவெடுத்தன. ஆறு முகங்களும் பன்னிரு தோள்களும் கொண்ட அழகிய தோற்றத்துடன் முருகப்பெருமான் தோன்றினார். |
| 23 | கந்தசட்டி (கந்தசஷ்டி) எந்த மாதத்தில் வருகிறது? | ஐப்பசி மாதம் பூர்வபக்கம் பிரதமை முதல் சட்டி (சஷ்டி) வரை ஆறு நாள்கள் சட்டி (சஷ்டி) விரதம் கொண்டாடப்படும். |
| 24 | முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகள் எவை? | புழனி, சுவாமிமலை, பழமுதிர்சோலை, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருத்தினிகை. |
| 25 | இலங்கையிலுள்ள மிகப் பழமையான தலமாகிய கதிர்காமத்தில் கோயில் கொண்ட முருகப் பெருமானுக்குத் திருப்புகழ் பாடியவர் யார்? | அருணகிரிநாதர். |
| 26 | "வேயுறு தோளி பங்கன்" என்று ஆரம்பிக்கும் தேவாரத்தைக் கொண்ட பதிகத்தின் பெயர் என்ன? இதனைப் பாடியவர் யார்? | பதிகத்தின் பெயர் கோளறு பதிகம். இதனைப் பாடியவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். |
| 27 | 1ஆம், 2ஆம், 3ஆம் திருமுறைகளைப் பாடியருளிய நாயனாரின் பெயரைக் கூறுக. | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் |
| 28 | கோயிலில் மந்திரங்கள் சொல்லி, தேவாரம் ஓதி, மலர்கள் தூவி, தீபம் காட்டி வழிபடும் முறை எப்படி அழைக்கப்படும்? | கிரியை வழிபாடு |
| 29 | கோயிலில் காட்டப்படும் தீபங்கள் 3 கூறுக. | ஒற்றைத் தீபம், அடுக்குத் தீபம், கும்ப தீபம், பஞ்சாராத்தி தீபம் |
| 30 | அப்பர் பெருமான் - திருநாவுக்கரசு நாயனார் - சூலை நோயால் வருந்திய பொழுது அவரின் தமக்கையாராகிய திலகவதியார் எப்படி அந்த நோயை மாற்றினார்? | அப்பர் பெருமானுக்கு முதலில் திருநீறு பூசியபின்னர் திருவதிகைக் கோயிலுக்குக் கூட்டிச் சென்றார். அங்கே அப்பர் "கூற்றாயினவாறு விலக்ககலீர்..." என்ற பதிகத்தைப் பாடிமுடித்ததுடன் நோயும் மாறிவிட்டது. |

| | | |
|---|---|---|
| 31 | சைவசித்தாந்தம் என்பதன் பொருளைக் கூறுக. | சைவசமய உண்மைத் தத்துவங்கள் - சைவசமயத்தில் ஞானிகள் சிந்தித்துக் கண்டறிந்த ஆன்மீகம் சம்பந்தப்பட்ட உண்மைக் கருத்துக்கள் |
| 32 | சிவபெருமான் எண்குணத்தான் என்று ஏன் அழைக்கிறார்கள்? | சிவபெருமான் எட்டுவித குணங்களைக் கொண்டவர். ஆதலால் அவர் எண்குணர்தான் என அழைக்கப்படுகிறார். |
| 33 | இறைவன் ஐந்தொழில்களை எவ்வண்ணம் நிதழ்த்துகிறார்? | இறைவன் ஐந்தொழில்களையும் பிரம்மா, விட்டுணு(விஷ்ணு), உருத்திரன், மகேசுவரன்(மகேஷ்வரன்) சதாசிவன் ஆகிய திருமேனிகளைத் தாங்கி நிகழ்த்துகிறார். |
| 34 | பஞ்சாங்க வணக்கம் (நமஸ்காரம்) என்றால் என்ன? அது யாருக்குரியது? | உடம்பின் ஐந்து உறுப்புகள் நிலத்தில் அழுந்தும்படி விழுந்து வணங்கும் முறை. இது ஆண்களுக்குரியது. |
| 35 | நால் முனிவர் என்னும் தொகைச் சொல் எவர்களைக் குறிக்கும்? | சனகர், சனந்தனர், சனாதரர்,சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களைக் குறிக்கும். |
| 36 | மகளிருக்கு உரிய நாற்குணங்கள் என்று சொல்லப்பட்டவை எவை? | அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு |
| 37 | இரு வகை வினைகள் யாவை? | நல்வினை, தீவினை |
| 38 | நாற்பயன் என்னும் தொகைச் சொல் எவற்றைக் குறிக்கும்? | அறம், பொருள், இன்பம், வீடு |
| 39 | ஐந்தொழில்களையும் இயற்றும் சிவ வடிவம் எது? | நடராசவடிவம். (நடராஜவடிவம்) |
| 40 | படைப்புக் கடவுளான பிரம்மாவிற்கு வேறு பெயர்கள் 3 கூறுக. | நான்முகன், பங்கயன், மலரோன் |
| 41 | நான்மறைகள் யாவை? | இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் |
| 42 | துர்க்கை அம்மனுக்கு வேறு பெயர்கள் 4 கூறுக. | மலர்மகள், பராசத்தி, கௌரி, சிம்மவாகினி |
| 43 | நவராத்திரி காலத்தில் நடு மூன்று நாள்களில் எந்த சத்திக்கு விசேட பூசை நடைபெறும்? | இலக்குமி (லக்ஷ்மி) தேவிக்கு |
| 44 | துர்க்கை அம்மனைத் தொழுவதால் என்ன நன்மை பெறலாம்? | வீரம், தைரியம், வெற்றி ஆகியவற்றைப் பெறலாம். |
| 45 | நவராத்திரியின் சிறப்பு என்ன? | துர்க்கை, இலக்குமி, சரசுவதி, ஆகிய மூன்று சத்திகளையும் வழிபடுவதே நவராத்திரியின் சிறப்பு ஆகும். |
| 46 | தீபாவளி என்பதன் கருத்து யாது? | தீபங்களை – விளக்குகளை வரிசையாக வைத்து வழிபடுதல் |
| 47 | எட்டுதிக்குப் பாலகர் யாவர்? | இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன். |
| 48 | ஓங்காரம் - இதற்கு இன்னொரு சொல் கூறுக. | பிரணவம். |
| 49 | | |